செய்தி வெளியீடு எண்: 618 நாள்: 16.10.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் 1 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு தரம் உயர்த்தப்பட்ட அண்ணா பூங்கா, பிரையண்ட் பூங்கா மற்றும் செட்டியார் பூங்காவினைத் திறந்து வைத்தார்கள்.

கொடைக்கானலின் மையப் பகுதியில் 25.72 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா, செட்டியார் பூங்கா ஆகியவற்றில் சுற்றுலா வரும் பார்வையாளர்களைக் எளிதில் கவரும் வண்ணம் அழகிய ஓடுகளுடன் கூடிய புதிய நடைபாதைகள், கண்ணைக் கவரும் சுற்றுச்சுவர், வண்ண விளக்குகள், அல்லி குளம், செயற்கை நீர் ஊற்றுகள், சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, வண்ண மலர்களுடன் கூடிய செடிகள், மாற்றி அமைக்கப்பட்ட முகப்புத் தோற்றம் ஆகியவை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் 1 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் மறு சீரமைப்பு செய்யப்பட்டு, தரம் உயர்த்தப்பட்ட அண்ணா பூங்கா, பிரையண்ட் பூங்கா மற்றும் செட்டியார் பூங்காவினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2012 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்கள்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான தகவல் மையம், பார்வையாளர்கள் மாடம், திறந்தவெளி அரங்கம், கண்ணாடி அறைகள், மலர் கண்காட்சி நடத்திடத் தேவையான அரங்கம், போன்சாய் தோட்டம், அழகிய புல் தரை, நிழற் குடைகள், உணவுக் கூடம், நீண்ட அகலமான நடைபாதைகள், தானியங்கி ஊர்தி மூலம் சுற்றி பார்க்க வசதியான பாதைகள், பூங்கா முழுவதும் வண்ண விளக்குகள், தானியங்கி தெளிப்பு நீர், சொட்டு நீர்ப்பாசன வசதிகளுடன் 36 ஏக்கர் பரப்பளவில் 7 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அரசு தாவரவியல் பூங்காவினையும்; ஏற்காட்டில் 20 ஏக்கர் பரப்பளவில் 8 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில், இன்றைய இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் சங்க காலத்தில் மலையும் மலைச்சார்ந்த பகுதியில்

வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, தாவர இனங்கள், வனவிலங்குகள், மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வகையிலும், சங்ககால நிகழ்வுகளை நினைவூட்டும் சிலைகள், கவன்கண் மேடை போன்ற அமைப்புகளுடன் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஐந்திணைப் பூங்காவினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2012 அன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 11 ஏக்கர் பரப்பளவில் 3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் ரோஜா தோட்டம் மற்றும் கொய் மலர்கள் செயல்முறை மாதிரிப் பண்ணை அமைத்தல்; கன்னியாகுமரியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 15 ஏக்கர் பரப்பளவில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் பூங்கா அமைத்தல்; கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் உள்ள தோட்டக்கலைப் பயிற்சி மையத்தின் உட்கட்டமைப்பு வசதியினை 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்துதல், என மொத்தம் 9 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், வேளாண்மைத் துறைச் செயலாளர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 16.10.2012